பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 03 2025 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- வங்கிச் சட்டங்கள் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.
- நாட்டின் வளர்ச்சியை புதுமை கண்டுபிடிப்புகள் தீர்மானிக்கும் என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் காசநோயை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் கூறியுள்ளார்.
- மாணவர்களிடையே அறிவியல் ஆய்வுகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு உதவித்தொகை வழங்கி வருவதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி செழியன் தெரிவித்துள்ளார்.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் கொல்கத்தா அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

வங்கிச் சட்டங்கள் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

மக்களவையில் ஏற்கனவே இச்சட்டத்திருத்த மசோதா நிறைவேறிய நிலையில், மாநிலங்களவையில் நேற்று இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன் மூலம் ஒரு வங்கிக் கணக்குக்கு தற்போது ஒரு வாரிசுதாரர் நியமிக்கப்பட்டு வந்த நிலையில், நான்கு வாரிசுதாரர்களை நியமிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

வங்கிகள் தங்களுடைய தணிக்கையாளர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்யவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இம்மசோதா குறித்த விவாதத்திற்கு பதிலளித்து பேசிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், நாட்டில் வங்கித்துறையை வலுப்படுத்த பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறினார்.

வங்கிகளில் நிதி நிலைமை ஸ்திரத்தன்மையுடன் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வங்கிக் கடனை வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நாட்டின் வளர்ச்சியை புதுமை கண்டுபிடிப்புகள் தீர்மானிக்கும் என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய அறிவுசார் சொத்துரிமை விருதுகள் வழங்கும் விழாவில் பேசிய அவர், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புதுமை கண்டுபிடிப்புகள், சரக்கு மற்றும் சேவை துறையில் கவனம் செலுத்தாமல் எந்த ஒரு நாடும் தற்போது வளர்ச்சியடைந்த நாடு என்று கூற இயலாது என்று கூறினார்.

இளையோரின் .பங்களிப்புடன் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான சூழலை கட்டமைக்க வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

தொழில்துறையினர் அதிக அளவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் ஈடுபட வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

இதன்மூலம் உலகில் புதுமை கண்டுபிடிப்பாளர்களின் நாடாக இந்தியா அங்கீகாரம் பெற முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

அறிவுசார் சொத்துரிமை துறையில் இணைந்து பணியாற்ற வேண்டுமென்று இளையோரை திரு பியூஷ் கோயல் வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஆயிரதது 500-க்கும் மேற்பட்ட போலியான செய்திகளை உண்மை கண்டறியும் குழு கண்டறிந்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது குறித்த கேள்விக்கு பதிலளித்து பேசிய அவர், இது தொடர்பாக 72 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கேள்விகள் பெறப்பட்டதாகக் கூறினார்.

இந்த கேள்விகள் தொடர்பாக பத்திரிகை தகவல் அலுவலகத்தில் உண்மை கண்டறியும் குழு ஆராய்ந்து சரியான தகவல்களை அதன் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிடுவதாக அவர் தெரிவித்தார்.

அரசு தொடர்புடைய செய்திகள் குறித்த புகார்களை மக்கள் தெரிவிக்கலாம் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் காசநோயை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காசநோய் துறையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை அவர் வழங்கினார்.

தமிழகத்தில் காசநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.,

கடந்த ஆண்டில் 93 ஆயிரத்து 301 பேருக்கு காசநோய் கண்டறியப்பட்டதாகவும், அவர் கூறினார்.

100 நாட்கள் நடைபெற்ற காசநோய் இல்லா தமிழகம் என்ற தொடர் பிரச்சாரத்தின் மூலம் 77 லட்சத்து 85 ஆயிரம் பேருக்கு காசநோய் பரிசோதனை செய்யப்பட்டதில் 21 ஆயிரத்து 788 பேர் அந்நோயால் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டதாகவும் திரு மா சுப்ரமணியன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மாணவர்களிடையே அறிவியல் ஆய்வுகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசின் சார்பில் உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருவதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னை பிர்லா கோளரங்க வளாகத்தில் அறிவியல் விழாவை தொடங்கி வைத்து பேசிய அவர், அறிவியல் துறையில் தமிழகம் முதன்மை இடத்தை பெற வேண்டுமென்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

சென்னை அறிவியல் விழாவுக்கு ஆண்டுதோறும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதாகவும், கடந்த ஆண்டு 15 ஆயிரத்து 500 பேர் இதனை காண வருகை தந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் சிறந்த அறிவியல் ஆசிரியர் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் விருதுகளையும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பேருக்கு பணி நியமன ஆணைகளையும் திரு கோவி செழியன் வழங்கினார்.

**[]<<<>>>[]**

விவசாயிகள் பயன்பெறும் வகையில் மத்திய அரசு பல்வேறு மானிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 60 சதவீத மானியத்தால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொய்மலர் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக அளவில் பயன்பெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ராஜா )  ----45 செகண்ட்*

**[]<<<>>>[]**

திருப்பத்தூரில் கடந்த 22-ஆம் தேதி தொடங்கிய புத்தக கண்காட்சி வரும் 31-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்று வரும் இந்த புத்தக கண்காட்சியில் அதிக எண்ணிக்கையிலான புத்தகங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், இது தங்களுக்கு பெரும் பயனுள்ளதாக இருப்பதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - மாணவர்கள் ) --- 38 செகண்ட்*

**[]<<<>>>[]**

உக்ரைனுடன் கடல்சார் போர் நிறுத்தம் செய்வதற்கு முன்பாக தங்கள் நாட்டின் மீது மேற்கத்திய நாடுகள் விதித்த தடைகளை நீக்க வேண்டுமென்று ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

சூடானில் துணை ராணுவப்படையினர் வசம் இருந்த கார்த்தூம் சர்வதேச விமான நிலையத்தை அந்நாட்டு ராணுவத்தினர் மீண்டும் கைப்பற்றியுள்ளனர்.

**[]<<<>>>[]**

இந்திய தொழில்துறை கூட்டமைப்பு மற்றும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சகம் சார்பில் இன்று புதுதில்லியில் நடைபெறும் மாநாட்டில் அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜிதன்ராம் மாஞ்ஜி பங்கேற்று உரையாற்றுகிறார்.

[]<<<>>>[]

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

[]<<<>>>[]

காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர்கள் பங்கேற்கும் கூட்டம் புதுதில்லியில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

[]<<<>>>[]

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தொலைதூர பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்க இம்மாதம் 31-ஆம் தேதி கடைசி நாளாகும்.

[]<<<>>>[]

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் காரில் கடத்தி வரப்பட்ட ஒரு லட்சம் ரூபாய் மதிப்பிலான 12 மூட்டை தடை செய்யப்பட்ட போதைப்பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி அருகே செங்கல்சூளையில் கொத்தடிமைகளாக பணி புரிந்து வந்த 48 பேரை வருவாய் துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள் மீட்டனர்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் வட்டத்தில் உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் அரசின் திட்டங்கள், சேவைகள் குறித்து ஆட்சியர் திருமதி உமா நேற்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டம் குன்னூர் மார்க்கெட் பகுதியில் நேற்று இரவு நேரிட்ட தீ விபத்தில் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருகடள் எறிந்து நாசமாயின.

[]<<<>>>[]

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு சதிஷ் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

குவாஹாத்தியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 151 ரன் எடுத்தது.

152 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய கொல்கத்தா 17 புள்ளி மூன்று ஓவரில் இரண்டு விக்கெட் இழப்புக்கு 153 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இன்று நடைபெறும் போட்டியில் ஹைதராபாத் அணி - லக்னோவை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**